# நவம்பர் – 29 – புதன்

**“நீங்கள் மன உறுதியோடு இருந்து உங்கள் வாழ்வைக் காத்துக் கொள்ளுங்கள்” (லூாக்.21:19)**

## முதல் வாசகம் : தானியேல் 5 :1–6, 13–14,16–17,23-28

அக்காலத்தில் பெல்சாட்சர் என்ற அரசன் உயர்குடி மக்கள் ஆயிரம் பேருக்குப் பெரியதொரு விருந்து வைத்தான் அந்த ஆயிரம் பேருடன் அவனும் திராட்சை மது குடித்தான். அவ்வாறு குடித்துக் கொண்டிருந்தபொழுது, அரசன் தானும் தன் மனைவியரும் வைப்பாட்டிகளும் குடிப்பதற்கென்று, தன் தந்தையாகிய நெபுகத்னேசர் எருசலேம் திருக்கோவிலிருந்து கொண்டு வந்திருந்த பொன், வெள்ளிக் கிண்ணங்களைக் கொண்டு வரச் சொன்னான். அதன்படி, எருசலேமிலிருந்த கடவுளின் கோவிலிருந்து கொண்டுவந்த பொன் கிண்ணங்களை எடுத்து வந்தார்கள் அரசனும் அவனுடைய உயர்குடி மக்களும், அவனுடைய மனைவியரும், வைப்பாட்டியரும் அந்தக் கிண்ணங்களிலிருந்து குடித்தார்கள். அவர்கள் திராட்சை மது குடித்துக்கொண்டே பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு, மரம், கல் ஆகியவற்றாலான தங்கள் தெய்வங்களைப் புகழ்ந்தார்கள். திடீரென்று ஒரு மனிதனுடைய கைவிரல்கள் தோன்றி அரசனது அரண்மனை உட்சுவரில் விளக்குத் தூணுக்கு எதிரே எழுதத் தொடங்கின. அவ்வாறு எழுதும் போது அரசன் அந்த உள்ளங்கையைப் பார்த்தான். அதைக் கண்டு அரசன் முகம் கறுத்து, நெஞ்சம் கலங்கி, குலைநடுங்கி, தொடை நடுக்கமுற்றான். அவ்வாறே அரசன் முன்னிலைக்குத் தானியேல் அழைத்து வரப்பட்டார். அரசன் அவரைப்பார்த்து, ”என் தந்தையாகிய அரசன் யூதாவிலிருந்து சிறைப் பிடித்துவந்தவர்களுள் ஒருவனாகிய தானியேல் என்பவன் நீதானே? உன்னிடத்தில் புனிதமிகு கடவுளின் ஆவியும் அறிவொளியும் நுண்ணறிவும் சிறந்த ஞானமும் உண்டென உன்னைப் பற்றிக் கேள்விப் பட்டுள்ளேன். விளக்கங்கள் கூறவும் சிக்கல்களைத் தீர்க்கவும் உன்னால் முடியும் எனக் கேள்விப்படுகிறேன். இப்பொழுது நீ இந்தச் சொற்களைப் படித்து இவற்றின் உட்பொருளை விளக்கினால், உனக்கு அரச உடைஉடுத்தி, கழுத்தில் பொன்மாலை அணிவித்து, என் அரசில் மூன்றாம் நிலையில் உன்னை அமர்த்துவேன்” என்றான். அப்பொழுது அரசனுக்குத் தானியேல் மறுமொழியாகக் கூறியது ”உம்முடைய அன்பளிப்புகள் உம்மிடமே இருக்கட்டும் உம் பரிசுகளை வேறு யாருக்காவது கொடும். ஆயினும், இந்தச் சொற்களை அரசருக்குப் படித்துக் காட்டி அவற்றின் உட்பொருளை விளக்கிக் கூறுவேன். ஆனால் விண்ணுலக ஆண்டவருக்கு எதிராக உம்மையே உயர்த்தினீர் அவரது கோவிலின் கிண்ணங்களைக் கொண்டு வரச் செய்து, நீரும் உம் உயர்குடி மக்களும், உம்முடைய மனைவியரும் வைப்பாட்டியரும் அவற்றிலிருந்து திராட்சை மது குடித்தீர்கள் மேலும் காணவோ, கேட்கவோ, எதையும் உணரவோ இயலாத வெள்ளி, பொன், வெண்கலம், இரும்பு, மரம், கல் ஆகியவற்றாலான தெய்வங்களைப் புகழ்ந்தீர்கள். ஆனால் உமது உயிரையும் உம் வழிகளையும் தம் கைக்குள் வைத்திருக்கும் கடவுளை நீர் பெருமைப் படுத்தவில்லை. ஆகையால் அவர் இந்தக் கையைத் தம் திருமுன்னிருந்து அனுப்பி, இந்த எழுத்துகளைப் பொறிக்கச் செய்தார். பொறிக்கப்பட்ட சொற்களாவன் ”மேனே மேனே, தேகேல், பார்சின்” இவற்றின் உட்பொருள் மேனே் கடவுள் உமது அரசின் நாள்களை எண்ணி வரையறுத்து அதனை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டார். தேகேல் நீர் தராசில் நிறுக்கப்பட்டீர் எடையில் மிகவும் குறைந்துள்ளீர். பார்சின் உமது அரசு பிரிக்கப்பட்டு மேதியருக்கும் பாரசீகருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது ”.

**பதில்பாடல்:** என்றென்றும் அரைப் புகழ்ந்து பாடிப் போற்றுங்கள்

## நற்செய்தி : லூக்கா 21 : 12 - 19

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியதாவது: இவை அனைத்தும் நடந்தேறுமுன் அவர்கள் உங்களைப் பிடித்துத் துன்புறுத்துவார்கள் தொழுகைக்கூடங்களுக்குக் கொண்டு செல்வார்கள் சிறையில் அடைப்பார்கள் என் பெயரின்பொருட்டு அரசரிடமும் ஆளுநரிடமும் இழுத்துச் செல்வார்கள். எனக்குச் சான்று பகர இவை உங்களுக்கு வாய்ப்பளிக்கும். அப்போது என்ன பதில் அளிப்பது என முன்னதாகவே நீங்கள் கவலைப்பட வேண்டாம். இதை உங்கள் மனத்தில் வைத்துக்கொள்ளுங்கள். ஏனெனில் நானே உங்களுக்கு நாவன்மையையும் ஞானத்தையும் கொடுப்பேன் உங்கள் எதிரில் எவராலும் உங்களை எதிர்த்து நிற்கவும் எதிர்த்துப் பேசவும் முடியாது. ஆனால் உங்கள் பெற்றோரும் சகோதரர் சகோதரிகளும் உறவினர்களும் நண்பர்களும் உங்களைக் காட்டிக்கொடுப்பார்கள் உங்களுள் சிலரைக் கொல்வார்கள். என்பெயரின் பொருட்டு எல்லாரும் உங்களை வெறுப்பார்கள். இருப்பினும் உங்கள் தலைமுடி ஒன்றுகூட விழவே விழாது. நீங்கள் மன உறுதியோடு இருந்து உங்கள் வாழ்வைக் காத்துக் கொள்ளுங்கள்“ என்றார்.

**தியானம் :** “உறுதியாக உங்களுக்குச் சொல்கின்றேன். நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள், அப்போது உலகம் மகிழும். நீங்கள் துயருறுவீர்கள்.” யோவா.16:20 “ஏனெனில் நான் உங்களை உலகிலிருந்து தேர்ந்தெடுத்துவிட்டேன். நீங்கள் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல. எனவே உலகு உங்களை வெறுக்கின்றது” யோவா.15:19 என்று நம் ஆண்டவர் இயேசு நமக்கு இன்பமான வாழ்வுக்கு மாறாக துன்மான வாழ்வே பரிசாகக் கிடைக்கும் என்று உறுதியாக நமக்குச் சொல்கின்றார். இயேசுவை சரியாகப் பின்பற்றினோம் என்றால் நமக்கு துன்பங்களும், சோதனைகளும், விமர்சனங்களும்தான் பரிசாகக் கிடைக்கும். இந்த துன்பங்கள் மத்தியிலும் இயேசு நம்மைத் தனிமையாக விட்டுவிடவில்லை. நமக்குத் துணையாக இருக்க துணையாளராம் தூய ஆவியானவரை அனுப்பியுள்ளார். நான் உங்களை திக்கற்றவர்களாக விடமாட்டேன். உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார். அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். நீங்கள் அவரை அறிந்திருக்கிறீர்கள். ஏனெனில் அவர் உங்களோடு தங்கியிருக்கின்றார். உங்களுக்குள்ளும் இருக்கின்றார் யோவா.14:15-18 என்ற வாக்குறுதியை இயேசு நமக்கு வழங்கியிருக்கின்றார். நம்முடைய வலுவின்மையில் வல்லமையாக செயல்பட தூய ஆவியானவர் நமக்கு துணையாகவும் நமக்கு உள்ளாகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார். இந்த உலகின் இருளின் சக்திகளை மேற்கொள்ள நமக்கு விண்ணகத்திலிருந்து அனுப்பப்பட்ட துணைதான் தூய ஆவியானவர். “தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணைநிற்கின்றார். ஏனெனில் எதற்காக எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது. தூய ஆவியார் தாமே சொல்வடிவம் பெறமுடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாய் நமக்காகப் பரிந்துபேசுகின்றார். மேலும் கடவுளிடம் அன்புகூர்பவர்களோடு, அதாவது அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு அவர்கள் நன்மைக்காகவே ஆவியார் அனைத்திலும் ஒத்துழைக்கின்றார்” உரோ.8:26,28. இவ்வாறு மன்றாடியபின் அவர்கள் கூடியிருந்த இடம் அதிர்ந்தது அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர்களாய்க் கடவுளின் வார்த்தைகளைத் துணிவுடன் எடுத்துக் கூறினார்.